ஆகவே, இந்த அரசு இதைப்பற்றி அறிந்திருக்கிறதா? இந்த அரசு பிரத்தியேகமாக இதற்கு அரசாணையை வெளியிட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்று கன்னியாகுமரி மாவட்ட விவசாயப் பெருங்குடி மக்கள் எல்லாம் நம்முடைய மாண்புமிகு துணை முதல்வர் அவர்களைச் சந்தித்து தங்களுடைய கோரிக்கையை வலியுறுத்தினார்கள். மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் என்னையும், நம்முடைய சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களையும் அழைத்து, அதேபோல துறையினுடைய செயலாளர், தலைமைச் செயலாளரை அழைத்து விவாதித்திருக்கிறார்கள். நான் முன்பே குறிப்பிட்டதைப்போல அவர்களுக்குப் பாதுகாப்பு இருக்கிறது. ஆனால், அவர்கள் எப்போது வேண்டுமானாலும் மாற்றிக்கொள்வதற்கு, முன் அனுமதி இல்லாமல் மாற்றிக்கொள்வதற்கு விரும்புகிறார்கள். முன் அனுமதி பெற்று, எப்போது வேண்டுமானாலும் நிலத்தை விற்கலாம். அவர்கள் விருப்பத்தை மாண்புமிகு துணை முதல்வர் அவர்களிடம் தெரிவித்திருக்கிறார்கள். தலைமைச் செயலாளரிடம் அதைப்பற்றி விவாதித்திருக்கிறார்கள். விரைவில் அதற்கு ஒரு நல்ல முடிவு ஏற்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 17, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

17—

நான்கு வழிச் சாலை

***14956—திரு. மு. அப்பாவு:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், திருச்செந்தூர்-கன்னியாகுமரி கிழக்குக் கடற்கரைச் சாலையை நான்கு வழிச் சாலையாக மேம்பாடு செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

2011 ஜனவரி 11]

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கின்றேன்.

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், திருச்செந்தூர்-கன்னியாகுமரி கிழக்குக் கடற்கரைச் சாலையானது தூத்துக்குடி-திருச்செந்தூர்-கன்னியாகுமரியை இணைக்கக்கூடிய ஒரு மாநில நெடுஞ்சாலை. இந்தச் சாலை தூத்துக்குடி முதல் திருச்செந்தூர்-கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களையும் இணைக்கின்ற காரணத்தால், இச்சாலை அனைத்தையும் இருவழிச் சாலையாக மாற்றுவதற்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனுமதி தந்திருக்கிறார்கள். அதன் அடிப்படையில் ரூபாய் ஒரு கோடியே 10 இலட்சம் மதிப்பீட்டிலே விரிவான திட்ட அறிக்கை (D.P.R.) தயார் செய்ய அனுமதியும் வழங்கப்பட்டு, அந்த விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. இன்னும் ஒருசில வாரங்களில் விரிவான திட்ட அறிக்கை அரசுக்குக் கிடைத்தவுடன், அத்திட்டத்திற்கான ஒப்பந்தப்புள்ளி கோரி இந்தத் திட்டப் பணியைத் துவக்க அரசு நடவடிக்கை எடுக்கும்.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

திரு. மு. அப்பாவு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய நல்லாட்சியில் தமிழகம் முழுவதும் சிறப்பான நல்ல சாலைகளை நம்முடைய மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் தந்திருக்கின்றார்கள். கிழக்குக் கடற்கரைச் சாலையை பிரதான சாலையாக கன்னியாகுமரி, திருச்செந்தூர், தூத்துக்குடி போன்ற பகுதிகளில் அதிகமாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். நான்கு வழிச் சாலையாக மாற்ற வேண்டும் என்பது எங்களுடைய விருப்பம். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இருவழிச் சாலைக்கு அனுமதி அளித்திருக்கின்றார்கள். இந்தப் பணிகள் எப்போது ஆரம்பித்து எவ்வளவு காலத்தில் முடிவடையும் என்பதைத் தங்கள் மூலமாக அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

[2011 ஜனவரி 11

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உதாரணமாக சென்னையிலிருந்து மாமல்லபுரம் வழியாக பாண்டிச்சேரியை இணைக்கக்கூடிய வகையில் கிழக்குக் கடற்கரைச் சாலை என்பது இருவழிச் சாலையாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது. அதற்கடுத்து பாண்டிச்சேரியிலிருந்து கடலூர் வழியாக நாகப்பட்டினம் வரை தேசிய நெடுஞ்சாலை, மத்திய அரசின் நிதியைப் பெற்று மாநில அரசால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இப்போது இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திற்கு அந்தச் சாலை மாற்றப்பட்டிருக்கிறது.

அதேபோல, நாகப்பட்டினத்திலிருந்து கிழக்குக் கடற்கரையையொட்டி, அதாவது மற்ற பகுதிகளுக்குச் செல்லாமல், சுற்றுலாப் பயணிகள் மற்ற வழிபாட்டுத் தலங்களுக்குச் செல்லக்கூடிய வகையிலே, பொதுமக்கள் சென்னையிலிருந்தும் அதேபோல, தென் பகுதியிலிருந்தும் வருவதற்கான அந்தச் சாலை சிறப்பாக அமைக்கப்பெற்று வருகிறது. உலக வங்கித் திட்டத்தின் அடிப்படையிலே நாகப்பட்டினத்திலிருந்து கிழக்குக் கடற்கரைச் சாலையையொட்டி அந்தச் சாலை தொண்டி வழியாக, இராமநாதபுரம் வழியாக தூத்துக்குடி வரை இப்பொழுது இருவழிச் சாலையாக மாற்றப்பட்டிருக்கிறது. அந்தச் சாலையும் உலகத் தரம்வாய்ந்த சாலையாக அமைந்திருக்கிறது.

அதற்கடுத்து தூத்துக்குடியிலிருந்து திருச்செந்தூர் வழியாக, ராதாபுரம் வழியாக தேசிய நெடுஞ்சாலை எண் 7-ல் ஏறத்தாழ கூடங்குளம் பகுதியில், அஞ்சுகிராமம் பகுதியிலே போய் இணையக்கூடிய வகையிலே, கன்னியாகுமரி மாவட்டத்திலே போய் இணையக்கூடிய வகையிலே அந்தச் சாலை அமையவிருக்கிறது. இந்தச் சாலையினுடைய முக்கியத்துவத்தைக் கருதித்தான் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதற்குரிய அனுமதியைத் தந்திருக்கிறார்கள். ஏற்கெனவே அந்தச் சாலை மிகவும் பழுதடைந்ததாகவும், சில இடங்களிலே ஒருவழிச் சாலையாகக்கூட இருந்தது. அனைத்தையும் இருவழிச் சாலையாகவும், அதேநேரத்திலே பெரியதாளை, குட்டகம், உவரி, காளிகுமாரபுரம், கூடங்குளம், ஸ்ரீரங்கநாதபுரம், செட்டிகுளம் போன்ற பகுதிகளுக்கெல்லாம் புறவழிச் சாலையும் அமைய

2011 ஜனவரி 11]

வேண்டியிருப்பதால் விரிவான திட்ட அறிக்கை (D.P.R.) தயாரிக்கப்பட்டு வருகிறது. கடந்த இரண்டு மாதத்திற்கு முன்புகூட அந்தச் சாலையின் நேர்பாடுகளையெல்லாம் நான் நேரடியாக ஆய்வு செய்தேன். அந்த விரிவான திட்ட அறிக்கை அரசுக்கு விரைவில் வரவிருக்கிறது. வந்தவுடன் ஒப்பந்தப்புள்ளி கோரி அதை இருவழிச் சாலையாக நம்முடைய சுற்றுலாப் பயணிகளுக்கும் அதேபோல, அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய வழிப்பாட்டுத் தலங்களுக்கெல்லாம் செல்லக்கூடிய வகையிலே தேசிய நெடுஞ்சாலை எண் 7-க்கு மாற்றாக இந்தச் சாலை மக்களுக்கு நல்ல சாலையாக அமையவிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

திரு. மு. அப்பாவு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தேசிய நெடுஞ்சாலை எண் 7-கன்னியாகுமரியிலிருந்து மதுரை செல்கின்ற சாலையில் திருநெல்வேலிக்கு வரும்போது திருச்செந்தூர், தூத்துக்குடி, மதுரை செல்வதற்கு சரியான புறவழிச் சாலை அமைக்கப்பட்டிருக்கின்றது.

அதேபோன்று, தேசிய நெடுஞ்சாலை கன்னியாகுமரி, நாகர்கோவிலிருந்து வருகின்றவர்கள் குற்றாலம், சங்கரன்கோவில், ராஜபாளையம் போன்ற பகுதிகளுக்குச் செல்ல வேண்டுமென்றால் திருநெல்வேலி மாநகரத்தினுள்ளே வந்து மிகச் சிரமப்பட்டுதான் செல்ல வேண்டிய நிலையில் இருக்கின்றார்கள். ஆகவே, அதை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்றபோது அதற்கும் ஒரு புறவழிச் சாலையை அமைத்துத் தருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதியளித்திருந்தார்கள். இப்போது அது எந்த நிலையில் இருக்கின்றது? எப்போது அதற்குரிய ஆய்வுகள் முடிவுபெற்று, மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, பணிகள் ஆரம்பிக்கின்ற நிலை வரும் என்பதையும் தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர்

அவர்கள் தமிழகம் முழுவதும் போக்குவரத்து நெரிசல் இருக்கக்கூடிய பல்வேறு நகரங்களுக்கு புறவழிச் சாலை அமைப்பதற்கு அனுமதி தந்திருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடக்கூடிய திருநெல்வேலிக்கான புறவழிச் சாலை குறித்து அந்தப் பகுதியிலே உள்ள நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவரும், அந்த மாவட்டத்தைச் சார்ந்த இரு அமைச்சர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் பல முறை எங்களிடத்திலே வலியுறுத்திய காரணத்தால், அந்த மாநகரத்தின் மேயரும் வலியுறுத்திய காரணத்தினால், நம்முடைய மாண்புமிகு முதல்வருடைய கவனத்திற்கு எடுத்துச் சென்றபோது, அவர்கள் அதற்கு அனுமதி தந்தார்கள். நேர்பாடு முடிவு செய்யப்பட்டு வருகிறது. அதாவது தேசிய நெடுஞ்சாலை எண் 7-லிருந்து வலதுபுறமாக சங்கர் நகர் என்ற பகுதியிலிருந்து பிரிந்து, சங்கரன்கோவில் சாலையைக் கடந்து, தென்காசி சாலையைக் கடந்து, அரசு பொறியியல் கல்லூரி அமைந்துள்ள திருநெல்வேலி, பாளையங்கோட்டை, தென்பகுதியில் கன்னியாகுமரி செல்கின்ற வகையில் அந்தப் பொறியியல் கல்லூரியின் பக்கம் போய் மீண்டும் தேசிய நெடுஞ்சாலை எண் 7-ல் இணையக்கூடிய வகையில், சுமார் 28 கி.மீ. தூரத்திற்கு நேர்பாடு முடிவு செய்யப்பட்டு வருகிறது. நேர்பாடு முடிவுற்றவுடன் திட்டத்திற்கான விரிவான அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு அந்தப் புறவழிச் சாலையை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராஜன்.*

திரு. அ. ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் எப்பொழுதெல்லாம் ஆட்சியில் இருக்கிறார்களோ, முதல்வராக இருக்கிறார்களோ, அப்பொழுதெல்லாம் தமிழகத்திலே ஒரு வழிச்சாலைகள் இருவழிச் சாலைகளாகவும், இரு வழிச்சாலைகள் நான்கு வழிச் சாலைகளாகவும், நான்கு வழிச் சாலைகள் 6 வழிச் சாலைகளாகவும், ஏன் 8 வழிச் சாலைகளாகக்கூட தரம் உயர்த்தும் பணிகள் நடைபெறுகின்றன. நாகர்கோவில் நகரைப் பொறுத்தவரையில், போக்குவரத்து நெரிசலால் ஏராளமான பொதுமக்கள் அல்லோலப்படுகிறார்கள். குமரி மாவட்டத்தின்*

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2011 ஜனவரி 11]

தலைநகரான நாகர்கோவிலைச் சுற்றி ஒரு புறவழிச் சாலை அமைக்கப்பட வேண்டும் என்று பல தடவை கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. அதற்கு நம்முடைய அமைச்சர் அவர்கள்கூட அதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். நாகர்கோவில் நகரின் அவசியத்தையும், முக்கியத்துவத்தையும் கருதி நாகர்கோவிலில் புறவழிச்சாலை எப்போது அமைக்கப்படும்; அது எந்த நிலையில் இருக்கின்றது என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகர்கோவிலில் இருக்கக்கூடிய போக்குவரத்து நெரிசலை இந்த அரசு நன்கு அறியும். அங்கே மேம்பாலம் தேவை என்று மாண்புமிகு உறுப்பினர்கள் கோரிக்கை வைத்தார்கள். மேம்பாலம் அமைவது என்றால், அங்கே நில எடுப்புப் பணிகள் ஏராளமாக வருகின்றன. அப்பகுதிகளில் கட்டடங்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் அரசுக்கு நிதி அதிகம் தேவை. எனவே, புறவழிச் சாலை அமைப்பதற்கு இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தினால் திருவனந்தபுரம் முதல் கன்னியாகுமரி வரை உள்ள அந்த் தேசிய நெடுஞ்சாலை எண் 47-ல் நாகர்கோவில், சுசீந்திரம் போன்ற பகுதிகளுக்கும் புறவழிச் சாலை அமைக்க ஒரு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது. அதற்கு விரைவில் ஒப்பந்தப்புள்ளி கோரி தனியார் பங்களிப்போடு அந்தச் சாலை அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 18, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.

18—

தொழில்நுட்பப் பூங்கா

*122922—திரு. டி. இராமச்சந்திரன்:

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—